R4875

# WHO WERE TYPIFIED BY THE LEVITES?

# லேவியர்கள் யாரை அடையாளப்படுத்தினார்கள்?

லேவியர்கள், “பரலோகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையை” அடையாளப்படுத்தினார்கள். அவர்கள் ஒரு ஆவிக்குரிய வகுப்பாராக, தெய்வீக தயவுக்குள் வந்தவர்களாக இருக்கிறார்கள்.

லேவியர்களின் சரித்திரம் முதற்பேறானவர்களை விசேஷமாக குறிப்பிடும்படியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முதற்பேறானவர்களின் இந்த சரித்திரம், பஸ்காவின் இரவில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் காக்கப்பட்ட முற்காலத்தை குறிப்பிடுகிறது. அந்த இரவு, பூமியின் இரவு காலமாகிய சுவிசேஷயுகத்தை அடையாளப்படுத்துகிறது. இந்த காலத்தில் தான் கர்த்தர் தமது சம்பத்து வகுப்பாரை தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த முதற்பேறானவர்களின் சபை மரணத்தை கடந்த ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். இந்த முதற்பேறானவர்கள் அனைவரும் “முதற்பேறானவர்களின் சபை” முழுவதையும் குறிக்கிறார்கள். இவர்கள் லேவி கோத்திரத்தின் மூலம் குறிப்பிடப்படுகிறார்கள். இந்த லேவியர்களிடமிருந்து ஆசாரியர்கள் சிலர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் நமது கர்த்தரையும் அவரது அடிச்சுவட்டில் உண்மையுடன் நடக்கிறவர்களையும் அடையாளமாக குறிப்பிடுகிறார்கள். ஆகையால் முழு முதற்பேறானவர்களின் சபை கிறிஸ்துவின் சரீர அங்கங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கிற திரள் கூட்டத்தாரையும் உள்ளடக்கியிருக்கிறது. கன்னிகைகள் அவளை பின்தொடருவார்கள். (சங்கீதம் 45:14) இவர்கள் அனைவரும் “பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையை” சார்ந்தவர்கள். ஆசரிப்பு கூடார ஊழியத்தை சார்ந்த லேவியரின் ஊழியம் சந்தேகத்திற்கிடமில்லாமல் முன்னடையாளமான ஒன்றாக இருக்கிறது.

பிரதான ஆசாரியன் மட்டும் “வருடத்திற்கு ஒரு முறை” பாவ நிவாரண நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சென்றார். ஆனால் உதவி ஆசாரியர்கள் இந்த நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்லமாட்டார்கள். (எபிரேயர் 9:6,7) ஆனால் சமூகத்து அப்பங்களின் மேஜை, குத்துவிளக்கு மற்றும் பொன்தூப பீடம் உள்ள முதற்கூடாரத்தில் பிரவேசிப்பார்கள். அவர்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் பரலோகத்தில் கிறிஸ்துவுடன் உட்காருகிறவர்களை நிழலாக காண்பிக்கிறார்கள். (எபேசியர் 2:7) இப்படியாக இவர்கள் பொதுவான விசுவாச வீட்டாரில் மிகவும் முன்னே இருப்பார்கள். ஆரோனின் குமாரர்கள் தான் இந்த உதவி ஆசாரியர்கள். அவர்கள் ஆசாரிய குடும்பத்தினராக இருந்து, மீதமுள்ள லேவியரைக்காட்டிலும் உயர்ந்த நிலைமையையும் உயர்ந்த உரிமைகள் மற்றும் சலுகைகளையும் பெற்றிருந்தார்கள். உதவி ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்துக்கு செல்வது நமது தற்கால அனுபவங்களை குறிப்பதாக காணப்படுகிறது. எதிர்கால அனுபவத்தை அல்ல, அப்பொழுது நாம் திரையின் வழியாய் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வோம் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

தற்காலத்தில் மெய்யான லேவியர்களின் அனுபவங்கள், எதிர்காலத்தில் இருப்பதைக் காட்டிலும், தற்காலத்தில் வேறுபட்டு இருக்கின்றன. தற்போது அவர்கள் பிரகார நிலைமையில் இருக்கிறார்கள். ஏனெனில் சரீர அங்கங்களாக இருக்கிறவர்கள் மட்டுமே “தேவனுடைய ஆழங்களை” அறியும்படி பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்ல சலுகை பெற்றவர்கள். ஆனால் பரிசுத்த ஸ்தலத்தின் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் போது நிழலான லேவியர் பரிசுத்தமானவைகளை சுமக்கவும் எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்பட்டார்கள். பொதுவான வழியில் அவைகளைத் தொட உரிமைப் பெற்றிருந்தார்கள். ஆனால் ஆசாரியர்கள் தொடுகிற முறைப்படி அல்ல. இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்கள் மட்டுமே தெய்வீக திட்டத்தைக் குறித்த ஆழமான, முழுமையான புரிந்து கொள்ளுதலை பெற்றிருப்பார்கள் என்பதை இது குறிப்பதாக தெரிகிறது. மற்றவர்கள் இதை ஒப்பிடும் தன்மையில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஆனால் முழுமையாக, ஆழமாக புரிந்து கொள்ள இயலாது.

பாவ நிவாரண பலிகள் தொடர்பான ஆராதனையை லேவியர்கள் நிறைவேற்றி, பாவ நிவாரண நாளுக்கு பிறகு அவர்களுக்கு ஒரு விசேஷ ஆராதனை இருக்கும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். பாவ நிவாரண நாளில் ஆசாரியன் வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக அவர்கள் காத்திருக்கும் போது, லேவியர்கள் ஜனங்களுக்கு போதிப்பதற்கோ அல்லது அவர்களுக்கு முக்கிய பாடத்தை கற்றுக்கொள்ளுவதற்கான காலமல்ல. ஆனால் பாவ நிவாரண நாளுக்கு பிறகு லேவியர்கள் சகல ஜனங்களுக்கும் பிரமாணத்தை விளக்குவதற்கு பொதுவான போதகர்களாக இருந்தார்கள். எதிர்காலத்தில் மெய்யான லேவியர்களுக்கு இது அவர்களது வேலையின் ஒரு பகுதியாக இருக்கும். அவர்களுக்கு நிலத்தில் சுதந்தரமும் அதன் ஆசீர்வாதங்களும் இருக்காது. அவர்கள் ராஜ்ய வேலையிலும் ஜனங்களுக்கு போதிப்பதிலும் இணைந்திருப்பார்கள். அது எப்படி நடக்கும் என்பது குறித்து நமக்கு தெளிவாக தெரியாது.

பாவத்தை விட்டு திரும்பி, தேவனை நெருங்கி, முழுமையான நீதிமானாக்குதலுக்கு முன்னேறுகிற அனைவரும் பிரகாரத்தில் உள்ள லேவியரை மிகவும் சரியாக குறிப்பிடுகிறார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர்கள் பாவத்தை விட்டு திரும்பி, பிரகாரத்திற்குள் வந்த சமயம், அவர்கள் நீதிமானாக்கப்பட்ட மனோபாவத்தில் இருக்கிறார்கள். இது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் குறிக்கிறது. தேவனுக்கு இணக்கமாக இருக்கிற அனைவரும் லேவியர்களாக கருதப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையான லேவியர்கள் ஆவது அவர்கள் முழுமையாக அர்ப்பணம் செய்வதைப் பொருத்து இருக்கிறது. இந்த அர்ப்பணத்தை அவர்கள் செய்யவில்லை என்றால் ஆவிக்குரிய தளத்திற்குரிய விசேஷித்த ஆசீர்வாதங்களை பெற மாட்டார்கள். நாம் அனைவரும் லேவியர்கள் என்ற வார்த்தையின் பொருளில் அதாவது நீதிமானாக்குதலை நெருங்குவதிலும், நீதியை விரும்புவதிலும் தேவனுடன் இணக்கமாக இருக்க விரும்பி அதை நாடுவதிலும் இருக்கிறோம். மாம்சத்தின் அழுக்கு

முதலானவைகளை நீக்கினோம். ஆனால் நமது சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் பிரவேசித்து புது ஜீவியத்தை ஆரம்பித்து அதன் மூலம் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற "முதற்பேறானவர்களின் சபையாக" ஆகும்வரை அந்த நீதிமானாக்குதலை நாம் பெறவில்லை. தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு யாராவது பின்வாங்கினால், நிறைவாக நீதிமானாக்கப்படுதலை அடைவதிலும் நீதியான வாழ்க்கையை பெறுவதிலும், நீதியின் கொள்கைகளுக்கு நீதியாக இருப்பதிலும் தேவனோடு இணக்கமாக இருப்பதிலும் தோல்வி அடைவார்கள்.

தேவனை நெருங்கி, நீதியை சிநேகித்து, தேவனுடன் இணக்கத்தை விரும்புகிறவர்கள் தற்காலத்தில் பிரகார நிலைமையை குறிப்பதாக தெரிகிறது. இந்த சுவிசேஷ யுக முடிவில் சில காரியங்கள் நடைபெறும். முழுமையான அர்ப்பண நிலைமைக்கும் ஆவியில் ஜெனிப்பித்தல் நிலைமைக்கும் வராதவர்களும், விசுவாச வீட்டாரையும் "முதற்பேறானவர்களின் சபையையும்" சாராதவர்களும் வெளியேறி பிரகாரத்தில் இருப்பதாக அங்கீகரிக்கப்படுவது நின்று போகும். இதற்கிடையில் முன்னரே அர்ப்பணம் செய்து, "தங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து," ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலை பெற்று, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிற சலுகைகளை கொஞ்ச காலம் அனுபவித்த வகுப்பாரிலிருந்து, தங்களது நிலைநிற்குதலை பராமரிக்காதவர்கள் இந்த யுக முடிவில் "சிறுமந்தை" வகுப்பாரிலிருந்து பிரிக்கப்படுவார்கள். அவர்கள் நிலைமை அதிலிருந்து பிரகார நிலைமையில் இருப்பதாக குறிப்பிடப்படுகிறார்கள்.